<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

Date: 25.07.2025
SC. No. 15/2018
பக்கம்
PW 4 மணி

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தின் போது யார் யார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.

**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

Date: 25.07.2025
SC. No. 15/2018
பக்கம் 3
PW8 அழகேசன்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**எரிந்து போன தென்னை கீற்று ஓலையில் மண்ணெண்ணெய் மற்றும் இதர எண்ணைகள் அதில் கண்டறியப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த ஒரு பகுப்பாய்வையும் செய்யவில்லை என்றும் ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்க ஆய்வு அறிக்கை தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் தவறாகும்.**

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
**காஞ்சிபுரம்.**

**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

Date: 25.07.2025
SC. No. 15/2018
பக்கம்
PW9 மனோகரன்
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

அசா.1 புகாரில் புகார் கொடுத்த மாதம் மற்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மாதம் நான்காவது மாதமாக எழுதி ஐந்தாவது மாதமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. (அசா.1 புகாரில் மாதம் 4 என்பதை அடித்தல் செய்து ஐந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது இதற்கு சாட்சி இல்லை என்று பதில் அளிக்கிறார்) அதுபோல் அசா.1 புகாரை நான் பெற்று அதில் பெறப்பட்ட தேதி 10 நாள் 2017 என்று எழுதப்பட்டு பின்பு 10.5.2017 என்று அந்த மாதத்தை மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் ஐந்து என்ற எண்ணை அவ்வாறு தான் எழுதுவேன். ( அசா.1 புகாரை பார்க்கும் பொழுது சாட்சி அதனைப் பெற்று அதில் எழுதப்பட்டுள்ள மாதம் நான்கு என்பதிலிருந்து ஐந்தாக திருத்தி எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தெளிவாக புலன் ஆகிறது ஆனால் சாட்சி அவ்வாறு அடித்தல் திருத்தத்தோடு தான் அவர் எழுதுவதாக சாட்சி மொழிகிறார்). அதுபோல் புகாரில் எவ்வளவு மதிப்பிலான பொருட்கள் சேதம் அடைந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.6 முதல் தகவல் அறிக்கையில் 14 வது களத்தில் புகாரின் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். அசா.ஆ.7 பார்வை மகஜரில் அதனை 2017 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதே ஆவணத்தில் நான் கையெழுத்து செய்துள்ளதில் 10.04.2017 என்று எழுதி 4 என்பதனை 5ஆக மாற்றி எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அதே ஆவணத்தில் முதல் சாட்சியின் தந்தையின் பெயர் மற்றும் சாட்சியின் பெயரும் வெள்ளை அழிப்பனால் அழித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை

மகஜர் சாட்சிகள் அசா.5 ஐந்து மற்றும் அசா.6 சுக்காஸ் மற்றும் சுனில் ஆகியோர் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். சாட்சி கையெழுத்து செய்த நபர்கள் ஒருவரின் இனிஷியல் டி என்றும் மற்றொருவரின் இனிஷியல் கே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்கள் அவ்வாறு தான் கையெழுத்து செய்தார்கள். பார்வை மகசரில் 500 மில்லி லிட்டர் பிடிக்கக்கூடிய லிம்கா பிளாஸ்டிக் பாட்டில் மூடியுடன் இருந்ததா, மூடி இல்லாமல் இருந்ததா என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அசா.ஆ.8 மாதிரி வரைபடத்தில் எரிந்த நிலையில் வீடு இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் சம்பவ இடத்தை குறிப்பிட்டு காட்டியுள்ளேன். அது போல் மாதிரி வரைபடத்தில் நான் கையெழுத்து செய்துள்ள இடத்தில் கீழே நான்கு என்று மாதத்தை போட்டு விட்டு அதனை மாற்றி ஐந்தாக எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அது போல் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தில் சேதம் அடைந்த பொருட்கள் உடைந்து கிடந்ததாக குறிப்பிட்டு காட்ட வில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள காலி ஓலை வீட்டின் வீடு யாருடையது என்று அல்லது அதன் உரிமையாளர் குறித்து விசாரித்து அவரை இவ்வழக்கில் ஒரு சாட்சியாக சேர்த்து உள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. அதுபோல் அசா.9 பார்வை மகசரில் சாட்சிகளின் பெயரில் முதல் சாட்சியின் தந்தையின் பெயரை அடித்தும் வெள்ளை அழிப்பானால் கொண்டு அழித்து மாற்றி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுபோல் அதே ஆவணத்தில் கைப்பற்றிய சொத்தின் விவரத்தில் ஐந்தாவதாக தீப்பெட்டி ஒன்று தீக்குச்சிகளுடன் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது இடைச்சொருகளாக வேறுநிற மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட தீப்பெட்டி மற்றும் லிம்கா பிளாஸ்டிக் பாட்டில் உள்ள மண்ணெண்ணெய் கொண்டதனை யாருடைய கைரேகை அதில் பதிவு பெற்றுள்ளது என்ற விவரத்தை ஆய்வுக்கு உட்படுத்தி தெரிந்து கொண்டேன்

என்றால் இல்லை. அதுபோல் அசா.ஆ8 மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள மகேஷ் என்பவரின் வீடை குறிப்பிட்டுள்ளதில் அந்த மகேஷ் என்பவரின் விசாரித்து இவ்வழக்கில் ஒரு சாட்சியாக சேர்த்து உள்ளேன் என்றால் இல்லை. பட்டியல் சாட்சிகள் ஒன்று முதல் ஆறு வரையுள்ள நபர்கள் அனைவரும் உறவினர்கள் என்றால் சரிதான். அசா.5 சுகாஷ் என்னுடைய விசாரணையில் அவருடைய தாயார் இந்த சம்பவம் குறித்து அவருக்கு கைபேசி வழியாக தெரிவித்ததாக என்னிடம் சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. இவ்வழக்கில் சேதார மதிப்பை காட்டுவதற்காக எரிந்து போனதாக சொல்லப்படும் வீட்டை நான் புகைப்படம் எடுத்து தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அசா.1 புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் நான் முதல் தகவலுக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்துள்ளேன் என்றும் சமூகத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சவ ஊர்வலத்தில் வெடிக்கப்பட்ட பட்டாசு காரணமாக தீப்பொறி குடிசை வீட்டில் மீது பட்டு தீ பிடித்ததினை அடைக்கப்பட்டு அதன் பிறகு அசா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
**காஞ்சிபுரம்.**